# இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்

**55/75, வொக்சோல் ஒழுங்கை,**
**கொழும்பு 02**

## வரலாறு

இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் 1938 ஆம் ஆண்டு 63 ஆம் இலக்க இறப்பர் நிர்வாக யாப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு இறப்பர் நிர்வாக திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டது மீண்டும் 1956 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க சட்டம் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் 1938 ஆம் ஆண்டு 63 ஆம் இலக்க சட்டம் அதிகாரம் அற்றதாகும். 1953 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க இறப்பர் மீண்டும் பயிர்ச் செய்கை நிவாரண சட்டத்தின் கீழ் இறப்பர் மீண்டும் பயிரிடல் நிவாரண நிதியம், இறப்பர் புதிய பயிர்ச் செய்கை மற்றம் மீண்டும் பயிர்ச் செய்கைக்கு நிவாரணம் வழங்கும் நோக்கத்துடன் ஸ்தாபிக்கப்பட்டதோடு அந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் 1955 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்கம், 1956 ஆம் ஆண்டு 54 ஆம் இலக்கம் மற்றும் 1998 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்கம் ஆகிய சட்டத்தின் மூலம் பின்னர் திருத்தப்பட்டது.

இற்பபர் நிர்வாக திணைக்களம் இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு இணையாக இயங்கிய ஆலோசனை குழு மற்றும் அதனுடன் 1994 ஆம் ஆண்டில் அதிக வலுவுடையதாக்கி இறப்பர் அபிவிருத்தி திணைக்களமாக மீண்டும் பெயரிடப்பட்டது.

## பிரதான பிரிவு

- நிர்வாக பிரிவு
- அபிவிருத்தி பிரிவு
  - பிரச்சார பிரிவு
- திட்டமிடல் பிரிவு
  - செஸ் வரி பிரிவு
  - கணனி மற்றும் புள்ளிவிபர பிரிவு
- கணக்கியல் பிரிவு
  - கணக்கியல் பிரிவு
  - இறுதி கணக்கியல் பிரிவு
- உள்ளக கணக்காய்வு பிரிவு

## நோக்கம்

- இறப்பர் மீண்டும் பயிர்ச் செய்கையினுள் நாட்டின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு பங்களிப்பு செய்தல்
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கேள்விகளுக்கு பொருத்தமான வகையில் இறப்பர் இறப்பர் உற்பத்தியை அதிகரித்தல்
- அதிக அறுவடையை பெற்றுத் தரும் புதிய முளைக்கட்டல் முறையை அறிமுகப்படுத்தல் மற்றும் அதனை முன்னேற்றுதலினுள் இயற்கை இறப்பர் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு பங்களிப்ப நல்குதல்
- இறப்பர் மீண்டும் பயிர்ச் செய்கை மற்றும் புதிய பயிர்ச் செய்கை நிவாரணத்தின் கீழ் இறப்பர் விவசாயிகளுக்கு இறப்பர் பயிர்ச் செய்கைக்கான நிதி நிவாரணம் வழங்கல் விவசாய ஈடுபாடு மற்றும் விவசாயத்தை விரிவு படுத்தல் சேவை வழங்கல் மூலம் விஷேடமாக சிறிய அளவிலான

இறப்பர் விவசாயிகளுக்க இறப்பர் உற்பத்தியை போதுமானளவு தரச்சிறப்புடனான முன்னேற்றத்திற்கு பங்களிப்புச் செய்தல்.

## செயற்பாடுகள்

1. இறப்பர் பயிரிடல் காணி உரித்தினை பதிவு செய்தல் மற்றம் பதிவு செய்யப்பட்ட காணி தகவலை நடாத்திச் செல்லல்
2. இறப்பர் மீண்டும் பயிரிடல் மற்றும் புதிய பயிரிடல் நிவாரண முறையின் கீழ் சிறிய அளவிலான விவசாயிகளுக்க மற்றும் பிரதேச பெருந்தோட்டக் கம்பனி நிமித்தம் இறப்பர் மீண்டும் / பயிரிடல் புதிய பயிரிடல் அனுமதி பத்திரத்தை வெளியிடுதல்
3. விதப்புரைக்கப்பட்ட இறப்பர் முளைக்கட்டலில் சிறிய அளவிலான இறப்பர் விவசாயிகளது பயிர்ச் செய்கைக்கு தேவையான இறப்பர் கன்றை உற்பத்தி செய்தல்
4. அனுபத்திரமுடைய விவசாயிகளுக்கு இறப்பர் கன்று, இரசாயன பசளை, விவசாய விரிவாக்கல் சேவை வழங்கல்
5. வர்த்தக இறப்பர் கன்று தவறணை அமைத்தலுக்கு அனுமதி பத்திரம் பெற்றுக் கொடுத்தல்
6. இறப்பர் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல் மற்றம் கன்று தவறணை அபிவிருத்திக்கு பெருந்தோட்டக் கம்பனி நிமித்தம் நிவாரணம் வழங்கல்
7. பால் வெட்டுவோர்கள் மற்றும் இணைப்பாளர்களுக்கு பயிற்சி அளித்தல்
8. உள்நாட்டு இறப்பர் உற்பத்தி விற்பனை சந்தை தொகுதி நிமித்தம் அனுமதி பத்திரம் பெற்றுக் கொடுத்தல்
9. இயற்கை இறப்பர் பால் மற்றம் இறப்பர் தொடர்பான உற்பத்தி ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறப்பர் தொடர்பான உற்பத்தி உற்பத்தியாளர்களை பதிவு செய்தல்
10. ஏற்றுமதியாளர்களின் மற்றும் உள்நாட்டு இறப்பர் மற்றும் இறப்பர் தொடர்பான உற்பத்தியின் படி செஸ் வரியை சேர்த்துக் கொள்ளல்

**இணைப்பாக்கம் செய்பவர்கள**

| | பெயர் | தொலைபேசி இலக்கம் | தொலை நகல் | ஈ மெயில் |
|---|---|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் | திரு.விமல் ரூபசிங்க | 011 2304812 | 011 2304813 | rubberdg@sltnet.lk |
| பணிப்பார் அபிவிருத்தி | திரு.ஆர்.பீ.பிரேமதாச | 011 – 2304815 | 011 – 2304815 | - |
| பணிப்பாளர் நிர்வாகம் | திருமதி.கே.வீ.பீ.ஜே. கமகே | 011- 2395562 | - | - |
| பணிப்பாளர் நிதி | - | 011- 2303876 | 011- 2303876 | - |
| அலுவலகம் | - | 011- 2395561 | - | - |

## இணையத்தளம்

www.rubberdev.gov.lk